பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
01 07 2024 **MONDAY** 6 45 **AM**
வணக்கம் - மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- மூன்று புதிய குற்றவியல் நடைமுறை சட்டங்கள் இன்று முதல் அமலுக்கு வருகின்றன.
- சரக்கு மற்றும் சேவை வரி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
- தமிழகத்தில் வீடு மற்றும் சொத்துக்கள் வாங்குவதற்கான புதிய சந்தை மதிப்பு வழிகாட்டி இன்று முதல் அமலுக்கு வருகிறது.
- தமிழகத்தில் மருத்துவத்துறையின் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, உலக வங்கியிடமிருந்து 3 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி பெறவிருப்பதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.
- இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸைஇன்று தொடர்ந்து விளையாடவுள்ளது.

>>>><<<<

நாடு முழுவதும் புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள மூன்று குற்றவியல் நடைமுறை சட்டங்கள் இன்று முதல் அமலுக்கு வருகின்றன.

பாரதீய நியாய சன்ஹிதா, பாரதீய நகஹரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதீய சாஷ்ஷிய அதினியம் ஆகிய இந்த மூன்று குற்றவியல் நடைமுறை சட்டங்களையும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்துள்ளது.

இந்த சட்டத்தின் மூலம், ஆன்லைன் வழியாக புகார் அளிக்கலாம், எந்தவொரு காவல்நிலையத்திலும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யலாம். முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தவர்கள் அதன் நகலை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

ஒருவர் கைது செய்யப்படும் போது, அவர் விரும்பும் நபருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்க முடியும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வழக்குகளை இரண்டு மாதங்களுக்குள் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வழக்குகளில் காலவிரயத்தை தவிர்க்கும் விதத்தில், மின்னணு வாயிலாக சம்மன் வழங்குவதற்கான நடைமுறையும் இந்த சட்டத்தின் வழி கொண்டுவரப்பட்டுள்ளது.

காவல்துறையினர் மற்றும் புலனாய்வு அமைப்பினர் இந்த சட்டங்களை திறம்பட கையாளுவதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த சட்டங்கள் குறித்த விழிப்புணர்வை அனைத்து தரப்பினரிடையேயும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷன், சமூக வலைதளங்கள் மூலமாகவும் இந்த சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**>>>><<<<**

'புதிய குற்றவியல் சட்டங்கள்' குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பாகிறது.

மாநில செய்திப் பிரிவு வழங்கும் இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் திரு. **Adeep Mohammed, Shamilee Rajkumar,** ஊடகவியலாளர் சியாமளா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இன்று இரவு 8.30-மணிக்கு பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகவுள்ள இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

**>>>><<<<**

சரக்கு மற்றும் சேவை வரி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நாடுமுழுவதும் ஒரே மாதிரியான வரி நடைமுறையை எளிமைப்படுத்தும் விதத்தில், சரக்கு மற்றும் சேவை வரி 2017ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த ஏழு ஆண்டுகளில் பல லட்சம் கோடி ரூபாய் வரி வருவாயை மத்திய அரசு ஈட்டியுள்ளது.

இன்று எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வரி விதிப்பு நடைமுறை மூலம் சேலம் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் வரி வருவாய் அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 50 செகண்ட்ஸ்)

>>>><<<<

தமிழகத்தில் வீடு மற்றும் சொத்துக்கள் வாங்குவதற்கான புதிய சந்தை மதிப்பு வழிகாட்டி இன்று முதல் அமலுக்கு வருகிறது.

சந்தை மதிப்புக்கு ஏற்ப வழிகாட்டி மதிப்பை உயர்த்தவும், பதிவு கட்டணத்தை குறைக்கும் விதத்திலும் தமிழக அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இடைத்தேர்தல் நடைபெறும் விக்கிரவாண்டி தொகுதி நீங்கலாக, மாநிலம் முழுவதும் இந்த புதிய சந்தை மதிப்பு வழிகாட்டி முறை அமலுக்கு வருகிறது.

>>>><<<<

டிவென்டி டிவென்டி உலக கோப்பையை வென்றுள்ள இந்திய அணிக்கு 125 கோடி ரூபாயை இந்திய கிரிக்கெட் வாரியம் பரிசாக அறிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் வாரியத்தின் செயலாளர் திரு. ஜெய் ஷா, வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்திய கிரிக்கெட் அணி மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதாகவும், இந்த தொடர் முழுவதும் உறுதியுடனும், திறமையுடனும் விளையாடியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், கிரிக்கெட் அணியின் உதவியாளர்கள் ஆகியோர் மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும், அவர்களுக்கு தமது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, தொடர் முழுவதும் தோல்வியை சந்திக்காமல் வெற்றிகளை குவித்துள்ளது குறிப்பிடத்தக்கது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வீரர்களின் இந்த சாதனையை பாராட்டும் விதத்தில், இந்த பரிசுத்தொகை வழங்கப்படுவதாகவும் திரு. ஜெய் ஷா கூறியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் மருத்துவத்துறையின் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, உலக வங்கியிடமிருந்து 3 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி பெறுவதற்காக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் இன்று அமெரிக்கா செல்கிறார்.

இடைத்தேர்தல் நடைபெறும் விக்கிவாண்டி தொகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், மருத்துவத்துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்வதாகவும், மேலும் மருத்துவத்துறையில் வளர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் பல திட்டங்களை செயல்படுத்தவுள்ளதாகவும் அதற்காக

அமெரிக்காவில் உலக வங்கியில் 3 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவி பெறுவதற்கான முயற்சிகளில் தாம் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்கள் தங்குமிடங்களை ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஸ்ரீநகர் அருகேயுள்ள **Panthachowk**–ல் அமைந்துள்ள முகாமை நேரில் பார்வையிட்டார்.

அதன்பின்னர், இந்த யாத்திரையின் ஒருங்கிணைப்பாளர்களுடன் அவர் பல்வேறு விஷயங்கள் குறித்து கேட்டறிந்தார்.

அங்கு கட்டப்பட்டு வரும் யாத்ரிகர்களுக்கான தங்கும் விடுதியை அவர் பார்வையிட்டார்.

அதிகமான யாத்திரிகர்களை தங்க வைப்பதற்கு தேவையான பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும் என்றும் துணை நிலை ஆளுநர், அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்.

**>>>><<<<**

இந்தியாவின் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டில் 800 பில்லியன் டாலருக்கும் கூடுதலாக உயரும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் ஆபரண நகை தொழில் துறை சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், உற்பத்தி துறையின் வளர்ச்சி இந்தியப் பொருளாதாரத்தை மேலும் வலுவான நிலையில் கொண்டு செல்ல உதவும் என்று தெரிவித்தார்.

2023-24ஆம் ஆண்டில் 778 பில்லியன் டாலராக இருந்த ஏற்றுமதி, தற்போது அதிகரித்து வருவதாகவும் திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

>>>><<<<

மணிப்பூர் மாநிலத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அம்மாநில ஆளுநர் திருமதி. அனுஷியா யுல்கி கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்பாலில் நடைபெற்ற குழந்தைகளுக்கான நாடகம் தொடர்பான கருத்தரங்கில் பேசிய அவர், மாநிலத்தில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தசூழ்நிலையை மாற்றுவதற்கும், எதிர்காலத்தை சிறப்பாக அமைப்பதற்கும் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

>>>><<<<

தமிழகத்தில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒருசில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

குமரிக்கடல் மற்றும் மன்னார்வளைகுடா பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இந்தப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அந்த மையம் அறிவுறுத்தியுள்ளது.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

நைஜீரியாவில் **Borno** என்னுமிடத்தில் நிகழ்ந்த தற்கொலைப்படை தாக்குதலில் 18 பேர் உயிரிழந்துள்ளனர். 40 பேர் படுகாயம் அடைந்தனர்.

>>>><<<<

கத்தார் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அந்நாட்டு பிரதமர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடினார்.

>>>><<<<

தேசிய மருத்துவர்கள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

>>>><<<<

மத்தியப்பிரதேசம் - ராஜஸ்தான் மாநிலங்களுக்கு இடையே **Parbati – Kalisindh - Chambal** ஆறுகளை இணைக்கும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

>>>><<<<

மாநிலத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு வகுப்புகள் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

>>>><<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் விற்பனை செய்வதை தடை செய்யும் விதத்தில் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

ஒகேனக்கல் காவிரி ஆற்றின் நீர்வரத்து இன்று காலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு ஆயிரத்து 500 கனஅடியாக உள்ளது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை நான்காவது நாளான இன்று தொடர்ந்து விளையாடவுள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தென்னாப்பிரிக்க அணி நேற்று ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்புக்கு 232 ரன் எடுத்துள்ளது.

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 603 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

ஃபாலோஆனை தொடர்ந்து விளையாடிய தென்னாப்பிரிக் அணி, முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 266 ரன் மட்டுமே எடுத்தது.

இந்தியாவின் சுழற்பந்து வீராங்கனை **Sneh Rana,** எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தி, சாதனை படைத்துள்ளார்.

**>>>><<<<**

யூரோ கோப்பை கால்பந்துப் போட்டியின், காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ஸ்பெயின் 4-1 என்ற கோல்கணக்கில் ஜார்ஜியாவை வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

காலிறுதிப் போட்டியில் ஜெர்மன் அணியை எதிர்த்து விளையாடவுள்ளது.

மற்றொரு போட்டியில் இங்கிலாந்து 2-1 என்ற கோல்கணக்கில் ஸ்லோவேக்கியாவை வென்றது.

இதனையடுத்து, காலிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி - ஸ்விட்சர்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

**>>>><<<<**